**C.C.No.38/2016**
**07.07.2025**

**PW1- முத்துலெட்சுமி, க/பெ ஜெயச்சந்திரன்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) எனக்கும், 1ம் எதிரிக்கும் திருமணமாகி எத்தனை வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால், 1–1/2 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம். எனக்கும், 1ம் எதிரிக்கும் திருமணமாகி எத்தனை நாட்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால், 1 மாதத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், நான் 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றேன் என்றால், சரிதான். அவ்வாறு சேர்ந்து வாழும் போது, எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல, சிறுசிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக எப்பொழுது புகார் கொடுத்தேன் என்றால், 2014ம் வருடம் புகார் கொடுத்தேன். தேதி, மாதம் தெரியுமா என்றால், தெரியாது.

2) தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால், சரிதான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால், எனது மூத்த சகோதரி உடன் வந்தார், அவர் எழுதினார். நான் என்ன படித்துள்ளேன் என்றால், 8ம் வகுப்பு படித்துள்ளேன். அந்த புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், காவல் நிலையத்தில் வைத்து, எவ்வாறு எழுதவேண்டும் என்று போலீசாரிடம் கேட்டு, நான் சொல்ல சொல்ல எனது சகோதரி எழுதினார். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், தெரியாது. புகார்மனுவில் தேதி எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

3) நான் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் எப்பொழுது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. புகார் மனுவில் எனது கணவர் அடித்தார், மாமியார் அடித்தார் என்றும், இரத்தக்காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன், அதற்கு மருத்துவமனையில் ஏதும் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால், இல்லை.

நானாக ஏதேனும் சிகிச்சை எடுத்துக்கொண்டு, அதன் ரசீதுகளை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால், காதில் அடித்து சிறிய காயம் ஏற்பட்டது என்பதால் சிகிக்சை ஏதும் எடுத்துக்கொள்ளவில்லை. எனக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை, அதனால்தான் போலீசாரிடம் ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

4) அதேபோல் நான் அனைத்து மகளிர் காவல் நிலையம், மேலூரில் 11.03.2014–ம் தேதி புகார் கொடுத்து, 11.07.2016ல் மேல் நடவடிக்கை தேவையில்லை என எழுதிக்கொடுத்தேன் என்றால், சரியல்ல. நான் அவ்வாறு எழுதிக்கொடுத்தேன் தற்போது, இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது திருமணத்தின்போது எதிரிகள் வீட்டார் எனக்கு 7 பவுன் தாலிக்கொடி அணிவித்தார்கள் என்றால், சரிதான். 1ம் எதிரி எனக்கு எதிராக மதுரை இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் HMOP No.482/2014 என்ற விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. (**அந்த HMOP No.482/2014–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி வழக்கில் கடந்த 31.01.2018–ல் 1ம் எதிரி எனக்கு எதிராக விவாகரத்து பரிகாரம் பெற்றுள்ளார் என்றும், அந்த வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றாலும், சரிதான்.

5) நான் திருமங்கலம் காவல் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து, 27.02.2019–ம் தேதி காவல் நிலையத்திற்கு வெளியே வைத்து 7 பவுன் நகையை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால், சரிதான். (**அந்த 27.02.2019ம் தேதியிட்ட உறுதிமொழி பத்திரத்தின் அசல் ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் விசாரணையில் மீதம் நகையை கேட்டேனா என்றால், வாய்மொழியாக கேட்டேன், மேலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, பெற்றுக்கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

6) நான் திருமங்கலம் காவல் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில், அனைத்து நகைகளையும் வாங்கி விட்டேன்,

அவ்வாறு நகையை வாங்கவில்லை என்றால் புகார் கொடுத்திருப்பேன், எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. மீதமுள்ள நான்கு பவுன் நகைக்கான ரசீது எதுவும் போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை.